ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
For Private Circulation Only
ECHOES INDIA
ஜனவரி 2012 மலர் 5 இதழ் 6

# புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!

## கடுமையான மன அழுத்தம் நிறைந்த ஆண்டு

முடிவடைந்த ஆண்டு (2012) மாஸ்டர், உயிர்க்கு ஆபத்தான நோயினை அனுபவித்து வந்ததைக் கண்டது. ஜூலையில், மாஸ்டரின் அபாயமான உடல் நலமின்மை, அவரது பிறந்தநாள் கொண்டாட்டங்கள் நடைபெற்ற திருப்பூருக்கு, அவரை வர இயலாமல் செய்தது. தலைமை பதவியிலிருந்து ராஜினாமா செய்யப்போவதை அறிவிப்பதற்காக, மாஸ்டர், ஆகஸ்ட் 15 அன்று மணப்பாக்கத்தில், ஒரு சிறப்பு பண்டாராவிற்கு அழைப்பு விடுத்தார். குறுகிய கால அறிவிப்பில் குழுமியிருந்த இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட அப்யாசிகள் முன்னிலையில் அவர், தனது முடிவை மாற்றிக் கொண்டார். மேலும் அவர் சகோ. கமலேஷ் பட்டேலை துணைத் தலைவராக நியமனம் செய்து நிர்வாகச் சுமையின் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளச் செய்தார். அன்றிலிருந்து, அவரின் வலிமை மிகவும் நிதானமாக முன்னேறிவருவதாகத் தெரிகிறது.

கடந்த மூன்று மாதங்களில், மாஸ்டர் அவரின் ஆரோக்கியத்தை திரும்ப பெறுவதில் உறுதியான முன்னேற்றம் கொண்டுள்ளதைக் காண முடிந்தது. மெதுவாக, ஆக்ஸிஜன் சிலிண்டர் நீக்கப்படுவதைக் காணமுடிந்தது. மேலும், சக்கர நாற்காலியும் தவிர்க்கப்பட்டது. தற்போது மாஸ்டர் தனது ஊன்றுகோல் மற்றும் உதவியாளரின் ஆதரவு கரங்களின் உதவியால், தியானக் கூடத்திற்குள் நடந்து, மாஸ்டர்களின் போட்டோக்களுக்கு மாலையிடவும் செய்கிறார். அவர் தனது காரில் பயணிக்கிறார். ஆசிரமத்தில் கோல்ஃப் ஊர்தியை பயன்படுத்துகிறார். அவர் இந்தியாவில் தனது பயணத்தை மறுபடியும் தொடர்வதை பற்றியும் பேச ஆரம்பித்துவிட்டார்! அதே சமயத்தில் அப்யாசி குழுக்கள் ஆசிரமத்திற்கு வந்த வண்ணம் உள்ளனர். மாஸ்டர் அவர்களுக்காக சத்சங்கம் நடத்துவதை ஒரு குறியாக கொண்டு உள்ளார். அவர் நிர்வாக வேலை மற்றும் மின்னஞ்சல் பரிமாற்றத்திற்கும் போதிய நேரத்தையும், சக்தியையும் கொண்டுள்ளார்.

காயத்ரிக்கு சென்ற பிறகு, மாஸ்டரின் குணமடைதல் வேகமடைந்ததைக் காண முடிகிறது. அவர் ஆசிரமத்திற்கு திடீர் வருகை புரிந்து, சத்சங்கங்களை நடத்தி அப்யாசிகளை ஆச்சரியப்படுத்துகிறார். அவர் உணவு உட்கொள்வது மேம்பட்டுள்ளது. மேலும் அவர் முகத்தில் வலியின் அறிகுறி இப்போதெல்லாம் காணப்படுவதில்லை. இருப்பினும் அவர் எளிதாக சோர்வு அடைந்துவிடுகிறார்.

சமீபத்தில், சகோ.மாதவா இல்லத்தில், அப்யாசி ஒருவர் மாஸ்டரிடம், "மாஸ்டர், இனிமேல் நீங்கள் மேலும் வலி கொள்ளக் கூடாது. நீங்கள் போதிய அளவு கஷ்டப்பட்டு விட்டீர்கள்," என்றார். மாஸ்டர் பிரகாசமடைந்து, அவரது வலது கையை நீட்டி, 'ததாஸ்து' (அவ்வாறே ஆகட்டும்) என்றார். புதுவருடம் மாஸ்டரின் வாழ்வில் வசந்த காலத்தை உறுதியளிப்பதாகவும், மற்றும் நல்ல ஆரோக்கியத்தையும், சந்தோஷத்தையும் அளிப்பதாகவும் அமைய வேண்டும் என்பதே, நம் விருப்பமும், பிரார்த்தனையும் ஆகும்.



புத்தாண்டு மாஸ்டருக்கு காயத்ரியில் தொடங்கியது. மாஸ்டர் மிகவும் முன்னதாகவே தயாராகி, தனது குடும்பத்தினர் மற்றும் அங்கிருந்த ஒரு சில மற்ற அப்யாசிகளுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். ஆசிரமத்திற்குச் சென்று, அனைத்து அப்யாசிகளையும் சந்திக்க மிக்க ஆர்வத்துடன் இருந்ததால் அனைத்து வேலைகளையும், முன்னதாகவே அவர் செய்துவிட்டார். மாஸ்டர் குறிப்பிட்டநேரத்திற்கு முன்பாகவே ஆசிரமத்தை அடைந்தார். ஏறத்தாழ 7500 அப்யாசிகள் ஆசிரமத்தில் இருந்தனர். அப்யாசிகள் மற்றும் குழந்தைகள் நீண்ட வரிசையில் நின்று, மாஸ்டர் ஆசிரமத்திற்குள் நுழையும்பொழுது வாழ்த்து கூறினர். மாஸ்டர் ஒரு மணி நேரம் நீடித்த சத்சங்கத்தை நடத்தினார். சத்சங்கத்திற்குப் பிறகு மாஸ்டர், முன் முடிவுறுதல் என்று பொருள் படும், முன்கணிப்பைப் (Prejudice) பற்றி ஒரு உரை நிகழ்த்தினார். மற்றவர்களை பற்றி முடிவு செய்வதால் முன்கணிப்பு ஏற்படுகிறது. நம்மைப் பற்றி நாமே முடிவு எடுக்கும்போது, அதுவும் முன்கணிப்பே ஆகிறது. "ஏனெனில், என்னை பற்றி நானே முடிவு செய்யும்போது, நான் அந்த முடிவுக்கு ஒதுக்கப்பட்டவன் ஆவேன்." அவர், "இன்பம் வாழ்க்கையின் லட்சியம் ஆகாது, மனித வாழ்வின் லட்சியமே பரிணாம வளர்ச்சிதான்' என்றார்.

உரைக்கு பிறகு, மாஸ்டர் ஆடிடோரியத்திற்குச் சென்றார். அவர் சோர்வாக இருந்த போதிலும், பல அப்யாசிகளை சந்தித்து, பரிசு கொடுத்தல் மற்றும் பெறுதல், மிஷன் விவகாரங்களை கலந்து பேசுதல், குழந்தைகளுக்கு பெயரிடுதல் ஆகிய பலவற்றைச் செய்தார். மாஸ்டர் தனது மதிய உணவை ஆசிரமத்தில் உட்கொண்ட பின், பிற்பகல் ஒரு மணி அளவில் காயத்ரிக்கு திரும்பினார். மீண்டும் மாலையில், பிரான்ஸ் மற்றும் சுவிட்சர்லாந்திலிருந்து வந்திருந்து, அன்று இரவு புறப்படும் அப்யாசி குழுவைச் சந்தித்தார். மாஸ்டர் தன்னுடைய அனைத்து ஐரோப்பிய பயணங்களை குறித்தும், அவர்களிடம் பேசலானார்.

மாஸ்டர் "பாபூஜி அறியாமையிலிருந்து அறிவு பெறுதல், மீண்டும் அறியாமை ஆகுதல் பற்றி பேசுவார். இவ்விரண்டுக்கும் வேறுபாடு என்ன? முதல்நிலை அறியாமை என்பது எதுவுமே தெரியாதிருத்தல், மேலும் இரண்டாம் நிலையில் அனைத்தையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். இருப்பினும் எதுவுமே உங்களுக்கு தெரியாது. அறிவு என்பது எல்லையற்றது. உங்களால் ஒருபோதும் அறிவை முழுவதுமாகச் செலவழிக்க முடியாது" என்று பேசிக்கொண்டிருந்தார்.



## அக்டோபர் 2012

அக்டோபர் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் மாஸ்டரின் உடல் நலம் நல்ல முன்னேற்றம் அடைந்தது. உடற்பயிற்சி (physiotherapy), ஓய்வு மற்றும் காலை உணவு ஆகியவை அவரது வழக்கமான தினசரி காலை செயல்களாக இருந்தன. பொதுவாக, அவர் காலை உணவு உட்கொள்ளும் போது, அவருக்கு செய்தித்தாள் வாசித்துக்காட்டப்படும். அதன் பிறகு மாஸ்டர் மின் அஞ்சல் பணியினைப் பார்க்கத் தொடங்குவார்.

அக்டோபர் 12 வெள்ளிக்கிழமை, காலை 9மணி சத்சங்கத்திற்குப் பின் மாஸ்டர், புனே அப்யாசிகளை சந்திப்பதற்காக, Dorm'A' க்கு வந்தார். அங்கு அவர் உரை நிகழ்த்தி அனைவருக்கும் சிட்டிங் கொடுத்தார்.

அக்டோபர் 13ம் தேதி சனிக்கிழமை, குடிலினை புதுப்பிக்கும் பணி துவங்கியது. குடில் இடிக்கப்பட்டு வேலை நடந்து வருகிறது.

ஒரு முறை, மதிய உணவுக்குப்பின்னர், மாஸ்டர், ஒரு மணி நேரத்திற்கும் மேலாகப் பேசிக்கொண்டிருந்தார். பிரான்ஸில் இருந்து, சுமார்15 அப்யாசிகள் அவரை சந்திக்க வந்திருந்தனர்.அவர்களில் ஒருவரை, பழைய நாட்களில் சந்தித்திருந்ததை நினைவில் கொண்டு, அவரின் பெயரினைக் குறிப்பிட்டுச் சொன்னவுடன், அந்த சகோதரி மிகவும் மனம் நெகிழ்ந்து போனதை காணமுடிந்தது. நாம் அன்பு காட்டும் போது நாம் நினைவுப்படுத்திக்கொள்கிறோம் என்றார் மாஸ்டர். பௌதிக ரீதியில் கூட, நாம் நுகர்ந்த வாசனை, நாம் பார்த்த சில காட்சிகள் அல்லது கேட்ட விஷயங்கள் ஆகியவற்றினை நினைவு கொள்ளும் போது, அதன் தாக்கம் வெளிப்படுகிறது. அதன் ஞாபகம் அந்த குறிப்பிட்ட நிகழ்ச்சியினை மீண்டும் கொண்டு வருகிறது.

அக்டோபர் 14 ஞாயிற்றுக்கிழமை ஒரு சிறப்பான நாள். மூன்று மாதகால இடைவெளிக்குப் பின்னர் மாஸ்டர், அன்று தியான கூடத்திற்கு வந்து, ஒரு மணி நேரம் சத்சங்கம் நடத்தினார். அதன் பிறகு சகோ.மாதவனின் வீட்டிற்குத் திரும்பி, அங்கு வெளியில் அமர்ந்தார். சகோ.சமஸ்கிருத கண்ணன் எப்போதும் போல் ஞாயிற்றுக்கிழமையில் படிக்கும் பகவத்கீதை சுலோகங்களை தன்னுடைய விளக்கத்துடன் படிக்கத் தொடங்கினார்.

அக்டோபர் 20 சனிக்கிழமை, மாஸ்டர் ஒரே ஒரு நபரின் உதவியுடன் கைத்தடியினை பயன்படுத்தி நடந்து வந்தது, மாஸ்டரின் உடல் நல முன்னேற்றத்தில் மற்றும் ஒரு திருப்பு முனையாக இருந்தது. மாஸ்டர், ஈரானில் இருந்து வந்த சகோதரிகளின் குழுவினை சந்தித்தார். அவர்களுடனும் அங்கு கூடத்தில் இருந்தவர்களிடமும் நீண்ட நேரம் பேசினார். மிக நுட்பமாகவும், ஆழமாகவும், அனைவர் மீதும் அவரது பணி நிகழ்ந்து கொண்டிருந்ததை, ஒருவரால் உணர முடிந்தது.

ஆன்மீக வேலை என்று வரும் போது, அங்கு ஆரம்பமும் இல்லை, முடிவும் இல்லை என்று மாஸ்டர் கூறினார். எப்பொழுதும் வேலை நடந்து கொண்டு இருக்கிறது. எதிர்காலத்திலும் வேலை தொடரும். நிகழ் காலத்தில் செய்ய வேண்டிய பணியும் மிக அதிகமாக உள்ளது. இதுவரை எந்த வேலையும் நடைபெறவில்லை என எண்ணுவது தற்பெருமையாகும். நமக்கு முன்பு இருந்தவர்களில், பலர் செய்த பணியின் மேல் தான், தற்போது நாம் செய்யும் பணிஉள்ளது. இதுவரை எப்பணியும் நடக்கவில்லை என தற்பெருமை கொள்ளாமல், நம் வேலையை அன்புடனும், பணிவுடனும் தொடர்ந்து செய்யவேண்டும்.

ஒரு நாள் மாலை, உடல் நிலை சற்று சரியில்லாததன் காரணமாக, மாஸ்டர் வெளியில் வராமல் இருந்தார். இருப்பினும், பேச்சுப்போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற குழந்தைகளைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைந்தார். அவர்கள் சொல்வதை கவனித்து, அவருடைய அனுபவங்களை அவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

சகோ. ஏ.பி. துரை மாஸ்டரை சந்திக்க வந்தார். தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மையங்களுக்கும், சமீபத்தில் அவர் சென்று வந்தது சம்பந்தமாக உரையாடிக்கொண்டிருந்தார். தற்போது நாம் காணும் அனைத்து வளர்ச்சியும், மாஸ்டரின் ஓய்வில்லா முயற்சி மற்றும் பலமுறை சுற்றுப்பயணம் மேற்கொண்டதன் விளைவுதான் எனவும், அவர் இந்த நகரங்கள் மற்றும் மையங்களுக்கு, கட்டாயம் பல முறை சென்று இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். ஒருவரின், 30-40 வயது தான், பயணம் செய்யவும், இயன்றவரையில் திறமையாக பணி செய்யவும் சரியான காலம் என்றும், நாம் முதுமை அடையும் போது, உடல் களைப்பு அத்தகைய பயணங்களுக்கு இடையூராக உள்ளது என்றும் மாஸ்டர் கூறினார்.

ஒருநாள் மாஸ்டர் ஆசிரமத்தை சுற்றி வந்தார். குடில் புதுப்பித்தல் பணி மற்றும் தியான மண்டபத்தில் நடைபெற்ற வேலைகளையும் பார்த்தார். பின்னர் Dorm'A' க்குச் சென்றார்.

பின்னர் டார்ம் 'ஏ' ல் உரை நிகழ்த்தி, சிட்டிங் வழங்கினார். பிறகு கேன்டீன் மற்றும் எல்லா இடங்களிலும் நின்று, அப்யாசிகளுடன் நேரத்தை செலவிட்டார். ஆசிரமத்தை நீண்ட நேரம் சுற்றிவந்ததால் மாஸ்டரின் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டது. அதற்குப் பிறகு மாஸ்டர், அந்த நாள்



முழுவதும் களைப்புடனும், வலியுடனும் காணப்பட்டார். அன்று மாலையில், மாஸ்டருக்கு உடல் நலம் நன்றாக இல்லாததால், மருத்துவர்கள் சோதனைகள் செய்து, அது வெறும் அழுத்தம் மற்றும் களைப்புதான் என்று தெரியப்படுத்தினர்.

அக்டோபர் மாதத்தின் இறுதியில், மாஸ்டருக்கு காய்ச்சல் இருந்தது. அநேகமாக, மாலை நேரங்களில் அவருக்கு குளுகோஸ் (salain)ஏற்றப்பட்டு படுக்கையிலேயே இருந்தார். முதுகுப்புறம் கொடுக்கப்பட்ட ஆதாரத்தின் உதவியால் தான், அவரால் அமர முடிந்தது. அவர் அதிகம் பேசவில்லை. மிகவும் சோர்ந்து காணப்பட்டார். மாஸ்டர் "எனக்கு எதையும் சாப்பிட வேண்டுமென்று தோன்றவில்லை, ஆனால் இவர்கள், எனக்கு உணவு அளித்து, நான் சிறிதாவது உட்கொள்கிறேன் என்பதை உறுதிப்படுத்திக் கொள்கிறார்கள்," என்று கூறினார்.

பெங்களூரு அப்யாசிகளுக்கான கருத்தரங்கின் போது, ஆசிரமத்தில் நடைபெற்ற மாலை சத்சங்கம், தனிச்சிறப்புடனும், மற்றும் அதிஅற்புதமாகவும் இருந்ததாக, சகோ.கமலேஷ் படேல், மாஸ்டரிடம் கூறினார். அதற்கு மாஸ்டர், அவர்கள் தயார்படுத்தப்பட்டிருந்ததால், கண்டிப்பாக அப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்றார். பெங்களூரில் இருந்து வந்திருந்த பிரிபெக்ட் ஒருவர் அதனை உறுதி செய்தார். இந்த ஒன்றுகூடுதலுக்கு வருவதற்கு முன்பு, அனைவரும் சிட்டிங் எடுத்திருந்தினர் என்று கூறினார். மாஸ்டர் "ஆம், அது சுத்திகரிப்பால் ஏற்பட்டது," என்றார். நாமனைவரும் மாஸ்டரை சந்திக்க மணப்பாக்கம் வருவதற்கு முன்பு, சிட்டிங் எடுத்துக்கொண்டு வரவேண்டும் என்பது, மிகவும் முக்கியமானது. அப்படி வரும்பொழுது, மாஸ்டர், எப்பொழுதும் நம் மீது பொழியத் தயாராக இருக்கும் அன்பென்ற பரிசினை, நம்மால் பெற இயலும்.

## நவம்பர் 2012

மாஸ்டரின் உடல்நலம் மிகவும் குன்றியுள்ளது. நோய் எதிர்ப்பு மருந்துகள்(antibiotics) அவரை மேலும் களைப்படையச் செய்வதுடன், பெரும்பாலான நேரங்களில் மயக்க நிலையிலும் இருக்கச் செய்கின்றன. (BiPAP) பைபாப் இயந்திரத்தின் உதவியின்றி, அவரால் சரியாக சுவாசிக்க இயலவில்லை. ஆயினும், நுரையீரலில் சேர்ந்திருந்த திரவத்தைச் சுத்தப்படுத்தியபிறகு, நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. உடலின் உட்புறப்பகுதியில் நோயின் தாக்கம் இல்லை என்று உறுதிப்படுத்திக்கொள்ள, ஒரு CT ஸ்கேனும் செய்யப்பட்டது.

தீபாவளிக்கு முன்பு, சகோ. பாஸ்கரன், பிரத்யேகமாக செய்யபட்டிருந்த இனிப்புகளை கொண்டுவந்திருந்தார். மாஸ்டர், அது எப்படி செய்யப்படவேண்டுமென்ற வழிமுறைகளைக் கூறினார். அதை தயாரிக்கும்பொழுது, தயாரிப்பவர் ஈர கைகளைக்கொண்டு செய்யக்கூடாது என்றும், அதனால் இனிப்புகள் விரைவில் கெட்டுவிடும் என்றும் கூறினார்.அவர் செய்யும் எதிலும் பூரணத்துவம் பெறத் தேவையான விவரங்களுக்கு அவர் கொடுக்கும் கவனம், குறை கூறமுடியாத ஒன்றாகும்.





நவம்பர் 9ம் தேதி, ஆசிரமத்தில், சகோ. கமலேஷ் அவர்களால், பல திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன. பின்பு, திருமணம் செய்து கொண்ட அப்யாசி தம்பதியினர் மாஸ்டரை சந்திக்க வந்திருந்தனர். அவர்களனைவருக்கும் மாஸ்டர் சிட்டிங் வழங்கினார். மாலையில் இயன்முறை சிகிச்சைக்குப் பிறகு, அவர் நடந்தே வெளியில் வந்து கூடத்தில் அமர்வார். சில அப்யாசிகள் மாஸ்டரை சுற்றி அமரத் தொடங்கியவுடனே, மாஸ்டர் கண்களை மூடிக்கொள்வார். அது, மாஸ்டர் ஒரு சிட்டிங் கொடுக்க ஆரம்பிப்பதைப்போல் தோன்றும். ஏறக்குறைய அரைமணி நேரத்திற்குப் பிறகு கண்களைத் திறந்து, அனைவருக்கும் இரவு வணக்கம் கூறி, திரும்ப உள்ளேசெல்வார்.

அதுதான் தொடர்ந்து மாலை நேரங்களில் நடைபெற்றது. மாலை நேரத்திற்குப் பிறகு, மாஸ்டர் கூடத்தில் வந்து அமர்வார். உடனடியாக அவரைச் சுற்றி அப்யாசிகள் வந்து அமர்வர். மாஸ்டர் கண்களை மூடி அமர்வார். மாஸ்டர், "ப்ளீஸ் ஸ்டார்ட்" என்று சொல்லாத பல சமயங்கள் உண்டு. ஆனால், முடிவில் 'தட்ஸ் ஆல்' மட்டும் சொல்வார். ஒருநாள் மாலையில் மாஸ்டர் தன்னுடைய அறைக்கு திரும்பிச் சென்ற பிறகு, நாக்பூர் மையத்தில் இருந்து வந்து, இரண்டு நாட்களாக மாஸ்டரைச் சந்திக்க முயற்சி செய்து கொண்டிருந்த சில குழந்தைகள், உள்ளே வந்தனர். அதில் ஒரு குழந்தை, "மாஸ்டர், விரைவாக குணமடையுங்கள், நாங்கள் உங்களை மிகவும் நேசிக்கிறோம்" என்று கூறியது. அதற்கு பதிலளிக்கையில் மாஸ்டர், "ஆம், எனக்குத் தெரியும், அதனால்தான் நான் வாழ்கிறேன்" என்று கூறினார். இதை மாஸ்டர் கூறியபோது, அவர் முகத்தில் பிரகாசத்தைக் காண முடிந்தது.

நவம்பர் 11 ஞாயிறன்று, மாஸ்டர் அவருடைய மின்மோட்டார் சக்கர நாற்காலியில், தானே இயக்கிக்கொண்டு, மிகவும் சுலபமாக மேடையின் மேல் சென்றார். மாஸ்டர் தியானக்கூடத்திற்குள் நுழைந்தவுடன், அப்யாசிகள் ஆரவாரமாக கைத்தட்டி, தங்கள் இதயத்தில் அன்புடன், தங்கள் அன்புக்குரியவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். மாஸ்டர் வழங்கிய சத்சங்கமானது, ஒரு மணி நேரம் ஐந்து நிமிடம் நீடித்தது. தீபாவளியன்று, உடல்நிலை சரியில்லாத நிலையிலும், சத்சங்கம் வழங்கினார். அது அவரது மனோசக்தியே ஆகும். அதன்மூலமாகவே, தன்னைக் காணவேண்டும் என்று வந்திருந்த அப்யாசிகளைச் சந்திப்பதற்காக வெளியே வர முடிந்தது. மாஸ்டர் தொடர்ந்து தனக்கு வாழ்த்துச் சொல்ல வந்த நிறைய அப்யாசிகளை சந்தித்தார். அவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட அப்யாசிகளை, ஐந்து நிமிடங்களில் சந்தித்த பிறகு, "நான் மிகவும் களைப்படைந்துள்ளேன், எனக்கு ஓய்வு தேவை, இனிமேல் பார்வையாளர்கள் வேண்டாம்" என்று கூறினார். மதியம் மீண்டும் தனது படுக்கை அறையில் ஒரு அப்யாசிகளின் குழுவைச் சந்தித்தார்.

மாஸ்டர், தென் கிழக்கு ஆசியாவின் மையங்களிருந்து வந்திருந்த, சுமார் 30 பிரிபெக்ட்களைச் சந்தித்தார். அவர் அவர்களுக்கு சிட்டிங் வழங்கி, மிகவும் ஆற்றல்மிக்க ஒரு உரையாற்றினார். அது பிரிபெக்ட்களின் பணி, மற்றும் பொதுவான பணியைப் பற்றியதாக இருந்தது.

ஒரு பணியை, ஒருவர் சிரத்தையாக எப்படி எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும், அதில் நாம் ஆழ்ந்து மூழ்கினால், விஷயங்கள் வெளிப்பட்டு, அவ்வேலையிலிருந்து எவ்வளவு கற்றுக் கொண்டு பயனடைய முடியும் என்பதைக் கண்டு நாம் பிரமிப்படைவோம் என்றும் மாஸ்டர் கூறினார். சிட்டிங்கைத் தொடங்குவது மற்றும் முடிப்பது பற்றிக் கூறுகையில் மாஸ்டர், "ஒருவர் வேலையை ஆரம்பிக்கத் தான் முடியும், முடிப்பது பாபூஜியிடம் உள்ளது" என்றார்.

ஒரு நாள் இரவு திரைப்படம் பார்த்த பிறகு மாஸ்டர், தயிரும், அரிசியும் சேர்த்து செய்யப்படும் மோர்க்களி என்ற தென்னிந்தியாவின் சுவையான பண்டத்தை உண்டார். மாஸ்டர் அதை எல்லோருக்கும் வினியோகித்து விட்டு "இது என் உடல்நிலை முன்னேறி வருவதைக் காட்டுகிறது" என்றார். மாஸ்டருடைய உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதால், சகோ. சான்ஸ்கிரிட் கண்ணன் அவர்களின் கீதை உரைகள், ஞாயிறுகளில் மறுபடியும் தொடங்கப்பட்டன. மாத முடிவிற்குள், மாஸ்டர் மேலும் நன்றாக நடமாடத் தொடங்கினார். அவர் அடிக்கடி வெளியே வந்து, வெய்யிலில் அமர்ந்து பல அப்யாசிகளைச் சந்தித்தார். ஒரு கலந்துரையாடலின் போது, மாஸ்டர், தியான மண்டப மேடையமைப்பில் மாறுதல் செய்யக் கோரும் சில படங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். எல்லோருடைய அபிப்பிராயங்களையும் கேட்பதில் அவர் மிகவும் குறிப்பாக இருந்தார். "நாங்கள் இங்கே மிகவும் தீவிரமாக கலந்தாலோசனை செய்து கொண்டிருக்கிறோம்" என்றார். முடிவில், எல்லோருடைய அபிப்பிராயத்தையும் கேட்ட பிறகு, அதை எப்படி முன் நடத்த வேண்டும் என்பதற்குச் சில குறிப்புகளை வழங்கினார்.

மாஸ்டருடைய உடல் நிலை முன்னேற்றத்தைக் காண்பித்த இன்னொரு நிகழ்ச்சி என்னவென்றால், அவர் கைத்தடியுடன் வெளியே வந்ததாகும். பிசியோதெரபிஸ்ட், "மாஸ்டர், நீங்கள் இன்று என் நாளை நன்னாளாக்கியுள்ளீர்கள்" என்றார். அதற்கு மாஸ்டர், "உங்களுடைய முயற்சியினால் தான் இது முடிந்தது. நன்றி" என்று கூறினார்.

## டிசம்பர் 2012

டிசம்பர் மாதம், மாஸ்டருடைய உடல் நிலையில் மேலும் முன்னேற்றம் ஏற்பட்டது. ஒரு ஞாயிறன்று அவர் கால்ப் வண்டியில் தியான மண்டபத்தை அடைந்து, நடந்து மேடையேறிச் சென்றார். அவருடைய நீடித்த நோய்க்குப் பிறகு, அவர் இவ்வாறு தியானமண்டபத்திற்கு வந்தது, இதுதான் முதல் முறையாகும். முதல் வாரம் மழை விடாமல் பெய்ய, மாஸ்டர் காரில் பயணம் செய்ய முயற்சிக்க விரும்பினார். அதனால் மாலை பிசியோதெரபிக்குச் செல்லும் போது, தமது அறையிலிருந்து முழு வழியும் நடந்து வாயிலை அடைந்து, காரில் ஏறி ஒரு சிறு பயணம் சென்று வந்தார். இது மாஸ்டர் உடல்நிலை சரியாக இருப்பதைத் தெளிவாக அறிவித்தது.

ஒரு நாள் மாலையில் மாஸ்டர், 'The Revelation of the Pyramids' என்னும் டாகுமெண்டரியைப் பார்த்தார். அது உயர்ந்த பிரமிடுகள் சரித்திரக் கட்டட வேலைகளைப் பற்றி அறிவூட்டுவதாக இருந்தது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடல்களின்போது, மாற்றத்தின் முக்கியத்துவம், பிரபஞ்சம் சம்பந்தப்பட்ட பணி, ஆகியவை பற்றி, மாஸ்டர் பேசிக்கொண்டிருந்தார். இயற்கையின் சீற்றத்தின் காரணமாக பெரிய விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்று ஒருவர் வினவ, அதற்கு மாஸ்டர், "அச்சமயத்தில் தியானம் செய்துகொண்டிருப்பதுதான் மிகவும் சிறந்தவழி. ஏனெனில், அப்போது ஏதாவது விபத்து ஏற்பட்டாலும், நாம் அதை எதிர் நோக்கத் தயாராக இருப்போம்"என்று கூறினார்.

பிரெசெப்டராக ஆக்கப்படவிருந்த இருவர், அங்கு வந்ததும், மாஸ்டருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். மாஸ்டர் விளையாட்டாய், "இப்போது நல்ல உடல் நிலையுடன் இருப்பதால், இவ்வேலையைத் திரும்பவும் நான் எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறினார். மாஸ்டர் உடல்நிலை சரியாக இல்லாமலிருந்ததிலிருந்து, சகோ. கமலேஷ் ப்ரிபெக்டுகளைச் செய்யும் வேலையை செய்து வருகிறார்.

## காயத்ரிக்குத் திரும்புதல்

ஐந்தரை மாத கால இடைவெளிக்குப் பிறகு, மாஸ்டர் காயத்ரிக்குத் திரும்பச் சென்றார். இல்லத்திற்குத் திரும்பியவுடன், சிட்டிங்குகள், அலுவலக வேலை, விருந்தாளிகளை வரவேற்றல், பேச்சு வார்த்தைகள் நடத்துதல் போன்ற தம்முடைய தினசரி அலுவல்களை நடத்தத் துவங்கினார். மதிய உணவிற்குப் பின் மாஸ்டர், ஏறக்குறைய ஒரு மணி நேரம், உணவுமேசையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார். அவரது நோயின் உச்சகட்டத்தில் நடந்த பல விஷயங்கள் அவருக்கு ஞாபகமில்லாததால், அப்யாசிகள் அவைகளைப் பற்றி நினைவூட்டிய போது ஆச்சரியமடைந்தார்.

ஒரு உரையாடலின் போது, மாஸ்டர், பொறாமையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். பல நபர்கள் அவரிடமும், பாபூஜியிடம் அவருக்கு இருந்த நெருக்கத்தின் பொருட்டும் பொறாமை கொண்டிருந்தனர் என்று மாஸ்டர் கூறினார். அப்போது ஒரு சகோதரர் பொறாமை கொள்வது சரியா என்று கேட்டார்.

"இந்த கேள்வியை நான் பாபூஜி மகராஜிடம் கேட்டேன். அதற்கு அவர், 'இல்லை, பொறாமைப்படுவது தீங்கு விளைவிக்கக்கூடியதாகும்.' என்று கூறினார்'" என மாஸ்டர் கூறினார். மேலும், "பொறாமைக்குணம் என்பது எதனுடனும் ஒப்பிட முடியாத ஒரு பாவமாகும். பொறாமைப்படுபவருக்கு நாம் எவ்வித அறிவுரையும் வழங்க முடியாது. அடிப்படையில்





பொறாமைக்குணம் என்பது, மற்றொரு நபருக்கு ஏற்கனவே கொடுத்ததை, உங்களுக்கும் கொடுக்கும் மாஸ்டரது ஆற்றலைக் குறித்து சந்தேகம் எழுப்புவதாகும்." என்றும் கூறினார்.

## டாக்டர். இச்சாக் அடிசஸ் அவர்களின் வருகை

டிசம்பர் 14 - 16 வரையிலான மூன்று நாட்களுக்கு, உலகளாவிய சேவைக்குழு நிகழ்ச்சியினை நடத்துவதற்காக, சகோ. இச்சாக் அடிசஸ் வந்திருந்தார். ஒரு நாள் சகோ. இச்சாக், மனித இனத்தின் எதிர்காலம் குறித்து மாஸ்டரிடம் கேட்டார். அதற்கு மாஸ்டர், அது மிக நன்றாக இருக்கும் என்று கூறினார். அதற்கு சகோதரர் அவர்கள், அணு அபாயம், அழிவு போன்றவற்றைக் குறிப்பிட்டு வலியுறுத்தினார். அதற்கு மாஸ்டர், "இது அழித்தல் அல்ல. இது முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்குத் தடையாக இருப்பவற்றை நீக்குவதாகும்." என்று கூறினார். அதன்பிறகு, கடவுள், மாஸ்டர் மற்றும் யார் மீது நம்பிக்கை கொள்வது என்பதைப் பற்றிய பேச்சு எழுந்தது. அதற்கு மாஸ்டர், "நான் என் மாஸ்டர் பாபூஜி மகராஜை நம்புகிறேன், கடவுளை அல்ல. சகஜ மார்க்கத்தைப் பொறுத்த வரையில், கடவுளுக்கு மனம் இல்லை. அவர் இந்த பிரபஞ்சத்தை உருவாக்கினார். அதை உருவாக்கியதுடன் அவரது பங்கு முடிவடைந்து விட்டது." என்று கூறினார். மேலும், "விதியை வழிநடத்திச் செல்பவர்கள், தாங்களாகவே பணிபுரிய முடியாது. அவர்களுக்கு இப்பூமியில் மாஸ்டரைப் போன்று ஒரு ஊடகம் தேவை.அவர் மூலமாக அவர்கள் பணிபுரிகின்றனர்" என்று மாஸ்டர் கூறினார். பின்னர் சகோ. இச்சாக், அன்பில் ஏன் பயம் இருக்கிறது என்று கேட்டார். அதற்கு மாஸ்டர், "அதற்கான ஒரே காரணம், நம்மால் கொடுக்க இயலாமல் இருப்பதுதான் ஆகும். கொடுத்தல் மற்றும் கொடுத்துக் கொண்டே இருத்தல் மூலம் பயமானது அகன்று விடும்" என்று கூறினார். "கொடுத்துக் கொண்டே இருங்கள்; அதிகம் கொடுப்பதற்காக நீங்கள் அதிகம் பெறுவீர்கள். இதற்கு நான் உத்திரவாதம் தருகிறேன்." என்பதையும் மாஸ்டர் சேர்த்துக் கூறினார்.

டிசம்பர் 16, ஞாயிற்றுக்கிழமை, மாஸ்டரைக் காண்பதற்கு அவரது இல்லத்தில் காத்துக் கொண்டிருந்த, ஜார்கண்ட் இருந்து வந்திருந்த அப்யாசிகளை அவர் சந்தித்தார். அதன்பிறகு ஆசிரமத்தில் சத்சங்கம் நடத்தினார். பின்னர் சகோ. இச்சாக் அடிசஸ் அவர்களுடைய, செயல் அலுவலர்களுக்கான நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். பிரிபெக்டுகளின் வேலையைப் பற்றிக் குறிப்பிடும்போது, அவர்களிடத்தில் நம்பிக்கையாக ஒப்படைக்கப்பட்டுள்ள, அப்யாசிகள் குழுவினரின் ஆன்மீகப் பயணத்தினை, மேற்பார்வை செய்வதில், அவர்கள் தனிச்சலுகை பெற்றவர்கள் என்று மாஸ்டர் கூறினார். "நரகத்திற்கு சென்றுகூட அப்யாசிகளைக் காப்பாற்றுவதற்கு பிரிபெக்டுகள் தயாராக இருக்க வேண்டும்" என்ற கருத்தை அவர் அனுசரித்தார்.

டிசம்பர் 23, ஞாயிற்றுக்கிழமை, மாஸ்டர் எட்டு திருமணங்களை காயத்ரியில் நடத்தி வைத்தார். கிறிஸ்துமஸ் தினத்தன்று, ஆசிரமத்தில் சத்சங்கம் நடத்தி, அப்யாசிகளுக்கு அவர் எதிர்பாராத இன்ப அதிர்ச்சி கொடுத்தார். சத்சங்கத்திற்குப் பிறகு, புதுப்பிக்கப்படும் மாஸ்டர் காட்டேஜினை அன்றாடம் பார்வையிடும் தனது வழக்கமான பணியைச் செய்தார். பிறகு கலையரங்கப் பகுதிக்குச் சென்றார். கிறிஸ்துவப் பின்னணியில் இருந்து வந்திருந்த வெளிநாட்டு அப்யாசிகள் மற்றும் இந்திய அப்யாசிகள் பலரையும், அவர் முகமலர்ச்சியுடன் வரவேற்று, அவர்களுக்கு அன்பளிப்புகளை வழங்கினார்.

டிசம்பர் 29, சனிக்கிழமை அன்று, தொடர்ச்சியாக மழை பெய்து கொண்டிருந்தது. அந்த மோசமான வானிலையையும் பொருட்படுத்தாமல், மாஸ்டர் வந்திருந்து, ஒரு மணிநேரம் சத்சங்கம் நடத்தினார். பிறகு அங்கிருந்து உடனடியாக காயத்ரிக்குப் புறப்பட்டார். மாலையில் காயத்ரியில், சிட்டிங்கிற்குப் பிறகு, சில அப்யாசிகளிடம் இருந்து அன்பளிப்புகளைப் பெற்றார். சகோதரி. அல்லா மற்றும் சகோ. இகர் இருவரும், உலகிலேயே இரண்டாவது மிகப்பெரிய மரமான, கலிபோர்னியாவில் இருக்கும் செகோயா என்ற மரத்தின் மிகப்பெரிய புகைப்படத்தினைக் கொண்டு வந்திருந்தனர். அந்த மரமானது, வயது ஆக, ஆக, மிகவும் பலம் வாய்ந்ததாகவும் ஆகிக்கொண்டு வருகிறது, அதைப் போலவே மாஸ்டரும் மேலும் மேலும் உறுதியுடன் திகழ வேண்டும் என்ற தங்களது விருப்பத்தினை மாஸ்டருக்கு விளக்கிக் கொண்டிருந்தனர். பிறகு அவர்கள், மாஸ்டர் இப்போதிலிருந்தே வலுப்பெற்று வருவதாகக் கூறி, அவருக்கு சில குளிர்கால உடைகளைக் கொடுத்தனர். ரஷ்யா மற்றும் சத்கோல் போன்ற இடங்களுக்குப் பயணிக்கும் பொழுது, குளிர்கால உடைகள் அவருக்கு தேவைப்படும் என்றனர். மாஸ்டர் சிரித்துக் கொண்டே, இந்த அன்பளிப்புகளை பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொண்டார்.

டிசம்பர் 31 அன்று, இரவு படுக்கைக்குச் செல்லும் முன்பாக, ஒரு அப்யாசி மாஸ்டரிடம், "மாஸ்டர், இந்த வருடத்தில் நாங்கள் பெற்ற மிகச்சிறப்பானதொரு பரிசு என்னவென்றால், நீங்கள் அனைத்து உடல்நலப் பிரச்சினைகளில் இருந்தும் நலம்பெற்று, ஆரோக்கியமாக எங்களிடம் திரும்ப வந்ததுதான்" என்று கூறினார். அதற்கு மாஸ்டர், "எனக்காக உங்கள் அனைவரையும் பெற்றிருப்பதுதா, நான் பெற்றிருக்கும் மிகச்சிறந்த பரிசு" என்று பதிலளித்தார். இஅது, நெகிழ்ச்சியான, ஆழ்ந்த அமைதியுடனான தருணமாக இருந்தது. மாஸ்டர் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கூறி உறங்கச் சென்றார்.





# மணப்பாக்கத்தில் நடைபெற்ற கருத்தரங்கங்கள்

## அக்டோபர் 16 - 21, 2012

கோரக்பூரிலிருந்து சுமார் 250 அப்யாசிகளும், பஞ்சாப், ஹரியானா மற்றும் சண்டிகர் ஆகிய மையங்களிலிருந்து சுமார் 400 அப்யாசிகளும் இக் கருத்தரங்கத்திற்கு வந்திருந்தனர்.

## அக்டோபர் 23 - 28, 2012

நொய்டா மற்றும் ஃபைசாபாத், ஃபரிதாபாத், அலிகர், ராம்பூர், சிக்லி போன்ற பிற பல மையங்களிலிருந்து சுமார் 200 அப்யாசிகள் வந்திருந்தனர். பல்வேறு சத்சங்கங்கள், குழுக் கலந்துரையாடல்கள், சந்திப்புகள், சிட்டிங்குகள், மற்றும் பிறவற்றில், எல்லோரையும் சேர்த்து சுமார் 500 அப்யாசிகள் பங்கேற்றனர்.

## அக்டோபர் 30 - நவம்பர் 4, 2012

பெங்களூரிலிருந்து, சுமார் 1300 அப்யாசிகள் இக்கருத்தரங்கத்திற்கு வந்திருந்தனர். முதல் நாள் சகோ. கம்லேஷ் உரையாற்றினார். மற்ற நாட்களில் உரையாடல்களும், அவற்றைத் தொடர்ந்து மாலை நேரங்களில் DVD ஒளிபரப்புகளும் இருந்தன. பிரிசெப்டர்களுக்கான சிறப்புப் பகுதிகளும் நடத்தப்பட்டன.

## நவம்பர் 6 - 11, 2012

நாக்பூர் மற்றும் பரேலியிலிருந்து வந்திருந்த அப்யாசிகளுடன், விருதுநகர், அலுவா மற்றும் பிற துணை மையங்களிலிருந்தும் அப்யாசிகள் இக்கருத்தரங்கத்திற்கு வந்திருந்தனர். நாக்பூரிலிருந்து வந்திருந்த ஒரு குழந்தைகள் குழு, ஆசிரமத்தைக் களைகட்ட வைத்தது. இந்த வாரத்தில், மொத்தம் சுமார் 500 அப்யாசிகள் வந்திருந்தனர்.

## நவம்பர் 12 - 18, 2012

தீபாவளி வாரத்தின்போது, குஜராத்திலிருந்து வந்திருந்த சுமார் 1200 அப்யாசிகள் கருத்தரங்கத்தில் பங்கேற்றனர். மாஸ்டரின் உடல்நலம் சற்று நன்றாகவே இருந்தது. அவர், செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் ஆசிரமத்திற்கு வந்து, சத்சங்கம் நடத்தி, பல அப்யாசிகளையும் குழந்தைகளையும் சந்தித்தார். அவரது பிரசன்னம் அனைவராலும் உணரப்பட்டு, அனுபவிக்கப்பட்டது.

## நவம்பர் 20 - 25, 2012

ஆந்திர பிரதேசத்தின் கோதாவரிகானி (பெத்தபள்ளி, ஜம்மிகுண்டா, மஞ்சேரியல், ஜெய்புரம், ஸ்ரீராம்பூர், மந்தமர்ரி, பெல்லம்பள்ளி, கொலேட்டி, அஸிஃபாபாத், சிர்பூர், மற்றும் பிற), திருப்பதி, பெல்லாரி, கம்ப்ளிகொட்டல் மற்றும் கங்காவதி ஆகியன உள்ளிட்ட கரீம் நகர் மாவட்டம் மற்றும் திருப்பதியிலிருந்து, மொத்தம் சுமார் 700 அப்யாசிகள் இக்கருத்தரங்கத்திற்கு வந்திருந்தனர்.

## நவம்பர் 27 - டிசம்பர் 2, 2012

சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, ஃபிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து, சுமார் 150 அப்யாசிகள் வந்திருந்தனர். இக்கருத்தரங்கம் ஒழுங்குமுறையாக நடைபெற வேண்டும் என்பதிலும், பயனுள்ள விதத்தில் இந்நிகழ்ச்சி அட்டவணையிடப்பட வேண்டும் என்பதிலும், மாஸ்டர் சிறப்பு கவனம் செலுத்தினார். மாஸ்டர், அனைத்து பிரிசெப்டர்களையும் சகோ. மாதவாவின் வீட்டிற்கு அழைத்து, அவர்களிடம் ஒரு நீண்ட உரையாற்றிய பின்னர், ஒரு சிட்டிங் கொடுத்தார். இதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தாற்போல, ஞாயிற்றுக்கிழமையன்று, மாஸ்டர் தனது கோல்ஃப் வண்டியில் ஆசிரமத்திற்கு வந்து, காலை சத்சங்கத்தை நடத்தினார்.

## டிசம்பர் 4 - 9, 2012

சுமார் 750 அப்யாசிகள் கொண்ட மற்றுமொரு பெரிய குழு, முக்கியமாக ஆக்ராவிலிருந்தும், ராய் பரேலி, சந்திராபூர், ஃபதேபூர் மற்றும் இடாஹ் உள்ளிட்ட அருகாமையிலுள்ள மையங்களிலிருந்தும் வந்திருந்தனர். மாஸ்டர் காயத்ரியில் இருந்தார். மேலும், அவர் காயத்ரியிலிருப்பது ஓய்வெடுக்கவும், உடல்நலம் தேறுவதற்காகவும் தான் என்பதை வலியுறுத்தியவாறு இருந்தார். வழக்கம்போல, எல்லா சத்சங்கங்களுடன் கருத்தரங்கம் தொடர்ந்து நடைபெற்றது. சகோ. கம்லேஷ் அவர்கள், சத்சங்கங்கள் நடத்துவதிலும், சந்திப்புகள் மற்றும் பிறவற்றில் பங்கேற்பதிலும் தன்முனைப்புடன் பங்காற்றினார்.

## டிசம்பர் 11 - 16, 2012

பிஹார் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களிலிருந்து, அப்யாசிகள் பெருமுயற்சிசெய்து, மிக அதிக எண்ணிக்கையில் மணப்பாக்கத்திற்கு வந்திருந்தனர். மொத்தம், சுமார் 750 அப்யாசிகள் வந்திருந்தனர். மாஸ்டர் காயத்ரியில், முடிந்த அளவு அதிக அப்யாசிகளை சந்திக்க முயற்சித்தார். மேலும், டிசம்பர் 16-ம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று ஆசிரமத்திற்கு வந்து, காலை சத்சங்கத்தை நடத்தி, அனைவரையும் இன்ப ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

## செவ்வாய்க்கிழமை டிசம்பர் 18 - 23, 2012

ஆந்திராவைச் சேர்ந்த அமலாபுரம், குண்ட்டூர் மற்றும் கடப்பாவிலிருந்து, மொத்தம் சுமார் 600 அப்யாசிகளும், கர்நாடகத்தின் ரெய்ச்சூரிலிருந்து, சுமார் 25 அப்யாசிகளும் இக்கருத்தரங்கத்தில் கலந்துகொண்டனர். வழக்கமான அட்டவணைப்படியான சத்சங்கங்களைத் தவிர, தூய்மை, முன்வினைப்பயன்கள், மாஸ்டரின் பங்கு மற்றும் மதமும் ஆன்மீகமும் ஆகிய தலைப்புகளில் பற்பல உரைகள் ஆற்றப்பட்டன ஒரு பிரிசெப்டர் சந்திப்பும் நடைபெற்றது. டிசம்பர் 23-ம் தேதியன்று, சகோ. கம்லேஷ் அவர்கள் ஞாயிற்றுக்கிழமை சத்சங்கத்தை நடத்தினார். அதே நாளில், காயத்ரியில், மாஸ்டர் எட்டு திருமணங்களை நடத்தி வைத்தார்.

## டிசம்பர் 25 - 30, 2012

இலங்கையிலிருந்து சுமார் 40 அப்யாசிகள் வந்திருந்தது, இந்த வாரத்தின் சிறப்பம்சமாக விளங்கியது. அவர்கள், தமிழில் நடைபெற்ற 'பயிற்சியில் நிலைபெறுதல்' என்ற இரண்டு-நாள் நிகழ்ச்சியிலும் பங்கேற்றனர். கிறுஸ்மஸ் தினத்தன்று மாஸ்டர் அங்கிருந்ததும், தொலைவிலிருந்து வந்திருந்த அப்யாசிகளை சந்திப்பதற்காக மாஸ்டர் சனிக்கிழமையன்று அங்கு வந்திருந்ததும், முதன்மை கவனத்திற்குரிய விஷயங்களாகத் திகழ்ந்தன. ஜம்மு காஷ்மீரிலிருந்து வந்திருந்த, சுமார் 80 அப்யாசிகளுக்கு, அதிலும் முதன்முறையாக வந்திருந்த பலருக்கு, மாஸ்டரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இதைத் தவிர, உத்தர பிரதேசம், மஹாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் ஹிமாச்சல பிரதேசத்தைச் சேர்ந்த, பற்பல மையங்களிலிருந்து வந்திருந்த அப்யாசிகளுடன் சேர்த்து, மொத்தம் சுமார் 950 பேர் இருந்தனர்.

# இளைஞர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்

## சகஜ மார்க்கத்தில் இளைஞர்களின் பங்கு

### பன்வேல் ஆசிரமம், மும்பை



அக்டோபர் மாதம் 6ஆம் தேதியன்று, மும்பையில் உள்ள பன்வேல் ஆசிரமத்தில், சகோ. மோகன்தாஸ் ஹெக்டே, சுமார்40 அப்யாசிகளுக்கு, ஒரு நிகழ்ச்சி நடத்தினார். இதன் முக்கிய நோக்கங்கள், மாஸ்டர், மிஷன் மற்றும் பயிற்சி முறையைப் புரிந்து கொள்ளுதல், மிஷனின் செயல்பாடுகளில் உற்சாகத்தை வளர்ப்பதற்கு இளைஞர்களுக்கு ஊக்கமூட்டுதல், மற்றும் ஒருமை உணர்வை வளர்த்தல் ஆகியவைகளாகும்

பயிற்சியின் மீதான மனப்பான்மை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றியும், ஆன்மீகத்தைத் தழுவிய உலக வாழ்க்கையை எவ்வாறு வாழ்வது என்பது பற்றியும் வலியுறுத்திய, 'பயிற்சியின் முக்கிய கருத்து' என்ற தலைப்பில் உரையாடல் நடைபெற்றது. 'பயிற்சியின் முக்கிய கருத்து' என்ற தலைப்பு, நிகழ்காலத்தில் வாழ்வது பற்றிய மனப்பான்மையின் முக்கியத்துவத்தை உரைத்தது. சரணாகதி, பொறுமை, சகித்துக் கொள்ளுதல் மற்றும் கீழ்ப் படிதல் போன்றவை, தன்னார்வத் தொண்டர்களின் தன்மைகளாக, தன்னார்வத் தொண்டிற்கு பலன் தரக்கூடிய மனப்பன்மைகளாகக் கண்டறியப் பட்டன. 'மாஸ்டரை நமது உதாரண புருஷராக எடுத்துக் கொள்ளுதல்' என்னும் கருத்து, பங்கேற்றோரை, மாஸ்டர் என்றால் நமக்கு என்ன என்பது பற்றிய, ஆழ்ந்த சிந்தனையில் மூழ்க வைப்பதற்குத் தூண்டுகோலாக இருந்தது. மேலும், 'நன்னடத்தை ஆன்மீக நன்மைக்கான வேர்' என்ற கருத்து, ஆன்மீகத்தின் அடித்தளங்களாக நன்னெறி மதிப்பீடுகளின் முக்கியத்துவம் என்பதைப் பற்றியதாக இருந்தது. சகஜ மார்க்கத்தின் பத்து நியமங்களின் முக்கியத்துவம் என்பது பற்றிய செயல் முறை வகுப்புடன், இந்தக் கலந்தாய்வுக் கூட்டம் முடிவடைந்தது. மேலும், இதில் கலந்து கொண்டவர்கள், இதன் மூலம் மூன்று M களையும் நன்கு புரிந்து கொள்ளவும் உதவியாக இருந்தது.

## சகஜ மார்க்கத்தின் இளைஞர் மன்றம், திருப்பூர்

திருப்பூர் மையத்தில், இளைஞர்கள் வழக்கமாக தியான மண்டபத்தில் ஒன்று கூடி, தன்னார்வத் தொண்டைப் பற்றிய தங்களது கண்ணோட்டங்களையும், கருத்துக்களையும் பகிர்ந்து கொள்கிறார்கள். மாஸ்டரின் அனுமதியுடன் அக்டோபர் மாதம் 29 ஆம் தேதி, சகஜ மார்க்கத்தின் இளைஞர் மன்றம் (Sahaj Marg Youth Club) துவங்கப்பட்டது. அதில் விளையாட்டுக்களும் சேர்க்கப்படும். அதன் ஆரம்ப கலந்தாய்வு, நவம்பர் மாதம் 4ஆம் தேதி, காங்கேயத்தில் நடைபெற்றது. சகோ. N. பிரகாஷ் துவக்கவுரை நிகழ்த்தினார். சகோ S.S.ராமகிருஷ்ணன், சகோ. ரவி சுப்பையன் மற்றும் சகோதரி எழிலரசி ஆகியோர், இளைஞர்களை அவரது நினைவில் மிஷனுக்கு சேவை செய்வதற்கு ஊக்கப்படுத்தினர்.

நவம்பர் மாதம் 11 ஆம் தேதியிலிருந்து 13 ஆம் தேதி வரை, இந்த மன்றத்தின் 25 உறுப்பினர்கள், நாற்றாம்பள்ளி ஆசிரமத்தில், ஆன்மீக சந்திப்பிற்காகவும், தன்னார்வத் தொண்டிற்காகவும் ஒன்று கூடினர். சத்சங்கத்தைத் தவிர, சுற்றுப்புறத் தூய்மையுடன் கூடவே, புத்தகம் படித்தல், குழு விவாதங்கள், கேள்வி பதில் வகுப்புகள், மாஸ்டரின் ஒலி ஒளி நாடாக்கள், குறிப்பிட்ட பொருட்களில் உரைகள் போன்றவையும், இருந்தன. இந்த நிகழ்ச்சி மகிழ்ச்சியோடும், உற்சாகத்தோடும் முடிவுற்றது.

## இளைஞர்களுக்கான 'சகித்துக்கொள்ளுதல்' பற்றிய பணிமுகாம், வதோதரா

டிசம்பர் மாதம் 16 ஆம் தேதி சகோதரி எலிசபெத் டென்லி, பரோடா, ஆனந்த் மற்றும் நாடியாட் போன்ற இடங்களிலிருந்து வந்திருந்த இளைஞர்களுடன், சகித்துக்கொள்ளுதல் என்ற தலைப்பு பற்றி கலந்துரையாடினார். சகிப்புத்தன்மை, 'நடைமுறையில் அடிப்படைப் பயிற்சி' (Grounding in the Practice) என்பதின் தொகுதிகளில் ஒன்றாக இருந்தது. பரோடா மையத்திலிருந்து ஐந்து ஒருங்கிணைப்பாளர்களும், சகோதரி எலிசபெத்தும், செவி மடுத்தலும், வாய் மொழிதலும் என்ற தலைப்புக்களுடன் ஆரம்பித்து, பொறுமை மற்றும் சகிப்புத்தன்மை பற்றி, ஆழ்ந்து உரைக்கப்பட்ட அந்த இரண்டு மணி நேர நிகழ்ச்சியை நடத்தினர். செவி மடுத்தலும், இதயத்திலிருந்து வாய் மொழிதலும் பற்றிய மாஸ்டரின் சொற்பொழிவுகளில் இருந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட கருத்துக்கள் படித்துக் காண்பிக்கப்பட்டன. சுமார் 60 அப்யாசிகள், பல குழுக்களாக பிரிக்கப்பட்டனர். ஒவ்வொரு குழுவின் உறுப்பினர்களையும் வழி நடத்தவும், உதவி புரியவும் ஒருஒருங்கிணைப்பாளரும் இருந்தார்.



# பிரிபெக்ட் கூட்டங்கள்



## NCR-டில்லி மண்டலம்

டில்லியில், நவம்பர் 24ம் நாள் நடந்த ஒரு கூட்டத்தில், 80 பிரிபெக்ட்கள் கலந்து கொண்டனர். சகோ. கம்லேஷ் படேல் மணப்பாக்கத்திலிருந்து, வீடியோ மூலம் வரவேற்புரை ஆற்றினார். ஆன்மீக வாழ்க்கையின் சாரம்சங்களான, மாற்றங்களுக்கு ஈடுகொடுப்பது, உள்நிலையைத் தக்கவைத்தல், கூருணர்வுத்திறன், பணிவு, சரணடைதல் மற்றும் சிட்டிங் அளிப்பதற்கு முன் ஒருவர் தனது நிலையை கவனித்தல் போன்றவைகளை பற்றி கூறினார். மண்டலப் பொறுப்பாளர், டாக்டர் சத்ய மண்டல், மாற்றத்தை ஏற்றுக் கொள்ளுதலின் முக்கியத்துவம் பற்றி பேசினார். ஐந்து குழுக்கள் உருவாக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் கலந்துரையாட, ஒரு தலைப்பு வழங்கப்பட்டது. குழுத் தலைவர்கள், கொடுக்கப்பட்ட தலைப்பின் செயல் திட்டங்களை அடுத்தக் கூட்டத்தில் கூறுவார்கள். டில்லி மையப் பொறுப்பாளர், சகோ. சுதிர் மர்வஹா, புராரி - தேசிய ஆசிரமம் பற்றிய தொகுப்பு ஒன்றினை வழங்கி, ஆசிரம நிலம் வாங்கிய பின் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை பற்றி விளக்கினார்.

## ஜெய்ப்பூர், ராஜஸ்தான்



அக்டோபர் 21-22ம் தேதிகளில், ஜெய்ப்பூர் மண்டல ஆசிரமத்தில், பிரிபெக்ட் கூட்டம் நடைபெற்றது. அது, நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல், உள் மண்டல குழுக்கள் உருவாக்கி, பிரிபெக்ட்களின் பயனுள்ள செயல்பாட்டிற்கு நம்பிக்கை உணர்வை வலியுறுத்துதல், இளைஞர்களை பயிற்றுவித்தல், புது பிரிபெக்ட்களை உருவாக்கத் தேர்ந்தெடுக்கும் முறைகள் போன்றவற்றை பற்றியதாக இருந்தது. இட அமைப்பின்படி, நான்கு உள் மண்டலங்களாக பங்கேற்பாளர்கள் பிரிக்கப்பட்டு, அதன் ஒருங்கிணைப்பாளர்களும் நியமிக்கப்பட்டனர். உரையாடல்களுக்கு பின் ஒருங்கிணைப்பாளர்கள், தங்களின் செயல் திட்டங்களை வழங்கினார்கள். இரண்டாம் நாள், உள்ளார்ந்த ஆற்றலுடைய பிரிபெக்ட்களை அறிந்து, தகுதி மற்றும் பயிற்சி அளிப்பதன் அவசியம் பற்றி விளக்கப்பட்டன. அனைத்து பங்கேற்பாளர்களும் நிகழ்ச்சியின் முடிவில் நிறைவாகவும், புத்துணர்வாகவும் உணர்ந்தார்கள்.



## கர்நாடகா

டிசம்பர் 8, 9ம் தேதிகளில், கர்நாடகா தெற்கு மண்டல மையங்களில், பிரிபெக்ட் பயணிக்கும் வாரம் நடந்தது. மொத்தம் 24 மையங்களை, 27 பிரிபெக்ட்கள் பார்வையிட்டனர். 24 இல்லக்கூட்டங்கள், 17 மையங்களில் முழுநாள் நிகழ்ச்சிகள், மற்றும் 6 மையங்களில் அரைநாள் நிகழ்ச்சிகள் இவ்வார இறுதியில் நடைபெற்றன. 'மிஷன் புத்தகங்களை படிப்பதன் முக்கியத்துவம்' என்பதே இந்நிகழ்ச்சியின் கருப்பொருளாக இருந்தது. நிகழ்ச்சி தனி அமர்வில் துவங்கி, அதனைத் தொடர்ந்து மாலையில் நடந்த இல்லக்கூட்டத்தில், பயிற்சிமுறையின் அடிப்படைகளைப் பற்றிக் கூறப்பட்டன. ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சி சத்சங்கத்துடன் துவங்கி, அதனைத் தொடர்ந்து, சகோ. கம்லேஷ் படேல் பரிந்துரைத்த ஒன்பது புத்தகங்களை படிக்க வலியுறுத்தும் ஒரு குழுக் கலந்துரையாடல் நடைபெற்றது.

## வடக்கு கர்நாடகாவில் பிரிபெக்ட் வருகை

டிசம்பர் 7, 8ம் தேதிகளில், பெங்களூருவிலுள்ள பிரிபெக்ட்கள், சகோ N.S. நாகராஜா, சகோ. B.G. பிரசன்ன கிருஷ்ணா, சகோ. கிரிஷ் டட்லூர் மற்றும் வெளியீட்டுத் துறை தன்னார்வத் தொண்டர்களும், வட கர்நாடகாவின் பல மையங்களுக்கு சென்று உரைகளும், சத்சங்கங்களும் நிகழ்த்தினர். செதாம், ஷோராபூர், யாட்கிர், கோகி, ஹம்னாபாத், பால்கி மற்றும் பிடார் ஆகிய மையங்களை பார்வையிடும் போதும், டிசம்பர் 8ம் தேதி நடந்த முழு நாள் நிகழ்ச்சியிலும், மண்டலப் பொறுப்பாளர் சகோ. ராஜு கஷம்பர்கர், மற்றும் உள்ளூர் பிரிபெக்ட்களும் கலந்து கொண்டார்கள்.

டிசம்பர் 9ம் தேதி, ஞாயிற்றுக் கிழமை, குல்பர்கா ஆசிரமத்தில் 270 அப்யாசிகளும், வட கர்நாடகாவின் அனைத்து பிரிபெக்ட்களும் ஒன்று கூடினர். 'இதயபூர்வமாக சேவை செய்யுங்கள்' என்ற தலைப்பில் உரைகளும், கலந்துரையாடல்களும் இருந்தன. அதனைத் தொடர்ந்து பிரிபெக்ட் கூட்டமும், கேள்வி-பதில் நிகழ்ச்சியும் இருந்தது. மாலையில் நடந்த வரவேற்புக்கூட்டத்தில், சகோ.நாகராஜா, சகோ.பிரசன்னா மற்றும் சகோ. ராஜு உரையாற்றினார்கள். கலந்து கொண்ட முப்பது விருந்தினர்களில் பத்து பேர் பயிற்சியைப் பின்னர் துவங்கினர்.



## இணைச் செயலாளர் வருகை- அஸ்ஸாம் ஆசிரமம்



இந்திய எண்ணெய் நிறுவன(Indian Oil Corporation) அஸ்ஸாம் பிரிவிலிருந்து வந்த அழைப்பின்படி, இணைச் செயலாளர் சகோ. A.P. துரை, அக்டோபர் 31ம் தேதி, 'கண்காணிப்பு விழிப்புணர்வு வார' விழாவில் கலந்து கொள்ள, திக்பாய்க்கு வந்தார். அது ஒரு புதன் கிழமையாக இருந்ததால், சுமார் 40 உள்ளூர் அப்யாசிகள் கலந்துகொண்ட ஒரு மணி நேர நிகழ்ச்சியில், அவரால் பங்கேற்க முடிந்தது. சகஜ மார்க்கப் பயிற்சியின் பல்வேறு அம்சங்களைப் பற்றிப் பேசும்படி அனைவரும் கேட்டுக்கொள்ளப்பட்டனர். சகோ.துரை திரும்பும் வழியில், தின்சுகியா ஆசிரமத்தில், இதே நிகழ்ச்சி, அடுத்து வந்த ஞாயிற்றுக்கிழமை, (நவம்பர்4) சத்சங்கத்திற்குப் பிறகு, இரண்டு மணி நேர நிகழ்ச்சியாக மீண்டும் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்காக, அப்யாசிகள் தங்களது பாராட்டுதலைத் தெரிவித்தனர். இதுபோன்ற கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் எதிர்காலத்தில் நடத்தப்படும் என பிரசெப்டர்கள் உறுதியளித்தனர்.

நவம்பர் 1ம் தேதி அன்று, திக்பாய், இந்திய எண்ணெய் நிறுவன தலைமை கண்காணிப்பு மேலாளரும், மைய பிரிசெப்டருமான, சகோ. சுனந் பாண்டே, உள்ளூர் உயர்நிலைப்பள்ளிகளுக்கு ஒரு விவாத நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார். 'அவையின் கருத்துப்படி, மாணவர்கள் நன்னெறி அமைப்புக்களால் மட்டுமே உந்தப்படவேண்டுமேயன்றி, குறிக்கோளால் அல்ல' என்ற பொருளில் சுமார் 40 மாணவர்கள் பேசினர். நிகழ்ச்சியின் தரம் மிகச்சிறப்பாக இருந்தது. இறுதியில் சகோ.துரை, விருப்பம்(அவா) மற்றும் குறிக்கோள்(முன்னேற ஆசை) பற்றிய மாஸ்டரின் போதனைகளை எடுத்துரைத்தார். அடுத்த நாள் அவர், பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் கலந்து கொண்ட, கண்காணிப்பு விழிப்புணர்வு வார நிறைவு விழாவில் கலந்து கொண்டார். பரிசுகளை வழங்கிய பிறகு, தியானத்தின் மூலம், உள்ளார்ந்த கண்காணிப்பை நமக்குள் வளர்த்துக்கொள்ளவேண்டியதன் தேவையைப் பற்றி எடுத்துரைத்தார்.

3ம் தேதி முற்பகல், சிறு எண்ணிக்கையிலான விருந்தாளிகளுக்கு தியானம் பற்றிய பணிமனை நடந்தது. திக்பாய் மற்றும் அருகிலுள்ள மையங்களான தின்சுகியா, தும் தூமா, மார்கேரிடா மற்றும் சிப்சாகரிலிருந்து ஏறத்தாழ 60 அப்யாசிகள், மண்டலப்பொறுப்பாளர், சகோ. தனிசந்த் அவர்களுடன் கலந்து கொண்டனர். அப்யாசிகள் சிலர், சகஜ மார்க்கத்தைப் பற்றி உரையாற்றும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். நிகழ்ச்சி, சகோ.துரை அவர்களின் விரிவான உரையுடன் முடிவு பெற்றது. ஆர்வலர்கள் 7 பேர், அறிமுக தியானத்தை தொடங்கினர்.





மாலையில் திக்பாய் அதிகாரிகள் சங்கத்தில், 'தியானத்தின் மூலம் சுய முன்னேற்றம்' என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்ட உரையில், சங்கத்தின் 50 பேர் அடங்கிய உறுப்பினர்கள்கள், மற்றும் அவர்களின் துணைவியர்கள் கலந்துகொண்டனர். சகோ.துரை அவர்களின், திறமை வாய்ந்த குருவின் வழிகாட்டுதலுடன், தியானத்தின் மூலம் நமக்குள்ளிருக்கும் உயர்ந்த சுயத்துடன் தொடர்பு என்ற, அகன்ற நோக்குடனான உரை, அனைவராலும் பாராட்டப்பெற்றது. ஆன்மீகத்தின் செய்தி, அனைவரது இதயங்களையும் வருடியதைக் காண முடிந்தது.

## ஆசிரம பராமரிப்புக்குழு ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி- ஆந்திரப்பிரதேசம்-வடக்கு

செப்டம்பர் 21ம் தேதி முதல், செப்டம்பர் 23ம் தேதி வரை, தும்குண்டா, மண்டல ஆசிரமத்தில், 115 ஆசிரம பராமரிப்புக்குழு உறுப்பினர்கள், மற்றும் ஆந்திரப்பிரதேச வடக்கு மண்டல அப்யாசிகளுக்கு, ஓர் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டதன் நோக்கம்:

- ஆசிரம பராமரிப்பு குழுவின் அங்கத்தினர்களுக்கு, பராமரிப்புக் குழுவின் பங்கு மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றை, அவரவர் மையம் அல்லது ஆசிரமத்திற்கு ஏற்றாற்போல நோக்க, ஊக்குவித்தல்.
- முறையான, ஒருங்கிணைக்கப்பட்ட ஆசிரம பராமரிப்புக்குழுவின் கூட்டங்களின் தேவைகள், மற்றும் கூட்டங்களின் அறிக்கைகளின் அம்சங்களை வெளியிடுதல் ஆகியவற்றை வலியுறுத்துதல்.
- ஆசிரம பராமரிப்புக்குழு கூட்டங்களை, எல்லா நேரங்களிலும் "தொடர்பு கொள்ளுதலுக்கான வழிமுறைகள்" உதவியுடன் நடத்துதல்.

பங்கு மற்றும் பொறுப்புகள், ஆசிரமப் பயன்பாடு, நிதி தொடர்பான திட்டம், வரவேற்புக்குழு, பராமரிப்பு, குழந்தைகள் மையம், ஆசிரம பாதுகாப்பாளர் மற்றும் தன்னார்வத்தொண்டர்கள் ஆகிய அனைத்து தலைப்புகளும் அனுபவம் வாய்ந்த பேச்சாளர்களால் கையாளப்பட்டன. ஆசிரம பராமரிப்புக்குழு விளக்க நூலை, தெலுங்கில் மொழியாக்கம் செய்ய ஒப்புதல் பெறப்பட்டது. தலைமைச் செயலகத்திலிருந்து வந்திருந்த சகோ.ஸ்ரீராமுடன், நிதி திட்டம் தொடர்பான கேள்வி பதில் நிகழ்ச்சி ஒன்று இருந்தது.

நிகழ்ச்சிக்கான மாஸ்டரின் செய்தியின்படி, ஆன்மீக அடிப்படையிலான சிந்தனைகள், சொற்கள் மற்றும் செயல்கள் வலியுறுத்தப்பட்டன. தூய்மையான சிந்தனைகள் மகிழ்ச்சிகரமான செயல்களுக்கும், சொற்களுக்கும் வழிகாட்டும் என்பது நிகழ்ச்சியின் வழிகாட்டியாக இருந்தது. ஆசிரமச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

## கோவா - SMSF ஆசிரமம் திறப்பு விழா




மாஸ்டர், கோவா ஆசிரமத்தை, 26-டிசம்பர் அன்று, வீடியோ மூலம் திறந்து வைத்தபொழுது, இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் இருக்கும் கோவா, மிஷனின் சரித்திரத்தில் தன் பெயரைப் பொறித்தது. டபொலிம் விமான நிலையத்திலிருந்து சுமார் 8 கி.மீ தூரத்திலுள்ள, சான்கோலே கிராமத்தில், சுமார் 2.5 ஏக்கர் நிலத்துடன், 80 அப்யாசிகள் அமரக்கூடிய தியான மண்டபம் கொண்ட வீடு ஒன்று, மும்பை மையத்தைச் சார்ந்த சகோ K.D. கோசம்பே அவர்களால் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது. சகோ கோசம்பே, அவருடைய மூத்த மகன் சகோ.விராஜ், சகோ. P.R. கிருஷ்ணா, சகோ.சுதிர் மர்வஹா, மற்றும் சகோ.ஆதித்ய ஆர்யா ஆகியோர் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். "ஒவ்வொரு வீடும் ஆசிரமமாக இருக்க வேண்டும் என்று பாபூஜி என்னிடம் கூறுவார். ஆசிரமம் நம்முடைய உள்புறத்தின் உயர்ந்த சுயத்தைப் பிரதிபலிக்க வேண்டும்" என்று மாஸ்டர் கூறினார்.

சகோ P.R. கிருஷ்ணா, காலை 9 மணிக்கு நடத்திய சத்சங்கத்தில், சுமார் 85 அப்யாசிகள் கலந்து கொண்டனர். கோவா ஆசிரம மேம்பாடு மற்றும் ஒருங்கினணப்பு குழு, தியான மண்டபத்தையும், அதன் சூழலையும், மேம்படுத்துவதற்குப் போதுமான ஊக்கத்தை இப்போது கொண்டுள்ளது.

## ஒருங்கினணப்பாளர்களுக்கான செயல்முறை விளக்கம், லக்னோ


ஒருங்கினணப்பாளர்களுக்கான செயல்முறை விளக்க நிகழ்ச்சி மற்றும் இந்தியில் GITP, 7-9 டிசம்பரில் லக்னோ ஆசிரமத்தில் நடத்தப்பட்டது. 4 மண்டலங்களிலிருந்து (உ.பி.கிழக்கு, உ.பி.சென்ட்ரல், உ.பி.மேற்கு,மற்றும் உத்ரகண்ட்) 65 பங்கேற்பாளர்கள், 7 பயிற்சியாளர்களுடன் (சகோதரிகள் சவி சிசோடியா, பூனம் பப்பர், நந்திதா மாதுர், விம்லா ஷோரன், சகோதரர்கள் நீரஜ் லவனியா, ஜிக்நேஷ் சேலத், ஓம்ப்ரகாஷ் கேஜ்ரிவல்) கலந்துகொண்டனர்.

7-ஆம் தேதி, சத்சங்கத்திற்குப்பின், 2 சிறிய நாடகங்களை பயிற்சியாளர்கள் வழங்கினார்கள். தன்னை ஏற்றுக்கொள்வது, மற்றும் சகோதர உறவுகளைப் பற்றியும் பல கூட்டத்தொடர்கள் நடத்தப்பட்டன. இரவு உணவுக்குப்பின், பல்வேறு குழுக்களிலிருந்து, சில பங்கேற்பாளர்கள், மறுநாள் நிகழ்ச்சிக்கு ஒருங்கிணைப்பாளர்களாக முன்மொழியப்பட்டனர்.


8-ஆம் தேதி, 'தியானம்' என்பதன் மீது இருந்த தொகுதி, உட்புறப் பிரதிபலிப்பு மற்றும் கவனித்தல் ஆகியவற்றின் மூலம், பயிற்சி செய்வதைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், தியான முறையைப் பற்றிய தெளிவான புரிதலை ஏற்படுத்திக்கொள்ளவும், உதவியது. எளிய, தெளிவான முறையில், தியானத்தைப் பற்றி, வருங்கால அப்யாசிகளுக்கு எப்படி எடுத்துரைப்பது என்பதும், இதில் சொல்லப்பட்டது.

சுத்திகரிப்பு பற்றிய தொகுதி, 9-ஆம் தேதி நடந்தது. சுத்திகரிப்பின் முக்கியத்துவம், சுத்திகரிப்பு முறையில் செய்யப்படும் தவறுகளை அறிந்து சரிசெய்வது, மற்றும் வருங்கால அப்யாசிகளுக்கு சுத்திகரிப்பு முறையை விளக்குவது ஆகியவை இதன் குறிக்கோளாக இருந்தது.


## புதிய வெளியீடுகள்





பூஜ்ய மாலிக் கே வார்த்தாயே
ஹிந்தி DVD





ஸ்லைசஸ் ஆஃப் எடெர்னிடி
ஆங்கிலம்
(விசிறிமடிப்புக் கையேடு)





டேல்ஸ் ஆஃப் வொண்டர்
ஆங்கிலம்
குழந்தைகள் புத்தகம்





நௌ ஐ ஆம் டெல்லிங் யூ
ஆங்கிலம்-DVD





மாஸ்டர்ஸ் டாக் டு ப்ரிபெக்ட்ஸ்
2010-2012
ஆங்கிலம் DVD




யூத்- எ டைம் ஆஃ ப்ராமிஸ் அண்ட் எஃப்ர்ட்
ஆங்கிலம் MP3




பிகமிங் விஷனரீஸ்
ஆங்கிலம் DVD




ஹார்ட் ஸ்பீக் 2010
பாகம் 2
ஆங்கிலம் DVD

## புத்தக வெளியீட்டு தன்னார்வத்தொண்டர்களுக்கான பயிற்சிமுகாம் முகாம், குல்பர்கா, வட கர்நாடகா

குல்பர்கா ஆசிரமத்தில் டிசம்பர் 7மற்றும் 8ம் தேதிகளில், பெங்களூரைச்சேர்ந்த சகோ. வெங்கட் ராவ் மற்றும் அவரது குழுவினரால், புத்தக வெளியீட்டு தன்னார்வத்தொண்டர்களுக்கான பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இதில் வடக்கு கர்நாடகா, மும்பை மற்றும் ஹைதராபாத்திலிருந்து வந்திருந்த சுமார் 50 பேர் கலந்து கொண்டனர். இதன் முக்கிய குறிக்கோள் யாதெனில், பதிப்பகம் சார்ந்த பணிகளில் தன்னார்வத்தொண்டர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது, மாஸ்டரின் போதனகளை, புத்தகங்கள் மற்றும் ஒலி / ஒளி சாதனங்கள் மூலம் பரப்புவது, அப்யாசிகளிடையே மிஷனின் புத்தகங்கள் படிக்கும் வழக்கத்தை ஊக்குவிப்பது போன்றவையாகும். இம்முகாமில் ஆர்வத்தைத்தூண்டும் உரைகள், குழு விவாதங்கள், பயிற்சிமுறையையொட்டிய விளையாட்டுக்கள், விற்பனை முறை பற்றிய முன்னோட்ட ஒத்திகை, விற்பனை சேவை முகப்பு((counter) அமைத்தல், ஒழுங்கு முறையாக கணக்கு வைத்துக்கொள்ளுதல், மற்றும் அனைத்து புத்தகங்களையும் சேகரித்தல் போன்றவை இடம் பெற்றன. பங்கேற்ற அனைவரும் இம்முகாமில் மிகுந்த பயன் பெற்றதை உணர்ந்தனர்.

## தெலுங்கு மொழிபெயர்ப்பு பயிற்சி

மாஸ்டரின் உரைகளை ஆங்கிலத்திலிருந்து பிராந்திய மொழிகளில் மொழி பெயர்க்க, ஆங்கிலம் மற்றும் பிராந்திய மொழிகளில் ஆளுமை மட்டுமின்றி, சகஜ மார்க்க முறையைப்பற்றிய ஆழ்ந்த புரிந்துணர்வும் அவசியம். இதை கருத்தில் கொண்டு செப்டெம்பர் 14-16 தேதிகளில், தும்குண்டா பிராந்திய ஆசிரமத்தில் ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. ஆந்திராவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், பெங்களூர் மற்றும் தில்லியிலிருந்தும் இதில் பங்கேற்க சுமார் 50 அப்யாசிகள் வருகை புரிந்தனர். இதன் முக்கிய நோக்கம் யாதெனில், மூலத்தின் சாரத்திலிருந்து பிறழாத, சீரான தரத்துடன் கூடிய மொழிபெயர்ப்பை உருவாக்குவதாகும். 'உணர்வு, எளிமை, சீரான நடை, மற்றும் அளவிலா ஆர்வம்', என்பது, உணர்வை மொழிபெயர்த்தல், மொழியை எளிமையாக வைத்தல், சீரான நடையை உறுதிப்படுத்திக்கொள்ளல், மற்றும் மட்டற்ற ஆர்வத்துடன் மொழிபெயர்த்தல் என்று பொருளாகும்.

சகோதரர்கள். ஆனந்த், காமேஷ்வர் மற்றும் கிருஷ்ணா ராவ் ஆகியோர், இவ்விரண்டு நாள் நிகழ்ச்சியை நடத்திவைத்தனர். அறிமுக நிகழ்ச்சியுடன் ஆரம்பித்த இம்முகாமில், தற்சமயத்தில் வழங்கி வரும் மொழிபெயர்ப்பு முறை, மொழிபெயர்ப்பாளருக்கான வழிமுறைகள், மொழிபெயர்ப்பு மென்பொருளை எவ்வாறு கையாள்வது மற்றும் மொழிபெயர்ப்பு செய்முறை பயிற்சி முதலியன, நிகழ்ச்சியின் சிறப்பு அம்சங்களாகும்.

## நடைமுறையில் அடிப்படைப் பயிற்சி

புதிதாக வடிவமைக்கப்பெற்ற 'நடைமுறையில் அடிப்படைப் பயிற்சி' (GIP) என்ற நிகழ்ச்சி, அகமதாபாத், ஜெய்ப்பூர் நகரங்களில் மூன்று நாள் நிகழ்ச்சியாகவும், மற்றும் உடுப்பி மையத்தில் ஒரு நாள் நிகழ்ச்சியாகவும் நடத்தப்பட்டது. அகமதாபாத்தில் அக்டோபர் 12-14 தேதிகளில் நடை பெற்ற இம்முகாமில் குஜராத், ராஜஸ்தான், மத்தியபிரதேசம் மற்றும் மும்பையிலிருந்து வந்த, சுமார் 163 அப்யாசிகள் கலந்து கொண்டனர். 35 தன்னார்வத்தொண்டர்களின் உதவியுடன், 30 ஒருங்கிணைப்பாளர்கள் கொண்ட ஒரு குழு இதை நடத்தியது. மிஷனின் புத்தகங்கள் மற்றும் மாஸ்டரின் ஒலி/ஒளி தகடுகளின் மூலம் உருவாக்கப்பட்ட இப்பயிற்சி முறை மிகவும் இயற்கையாக அமைந்து விட்டது. பதினைந்து வருடங்களுக்கும் மேலாக அப்யாசிகளாக இருப்பவர்கள் கூட, சகஜ மார்க்கப்பயிற்சியைப் பற்றிய தங்கள் கண்ணோட்டம் முற்றிலும் மாறி விட்டதாகவும், ஒரு உண்மையான அப்யாசியாக உருவெடுக்க நாம் ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டுமென தெரிந்து கொண்டதாகவும் கூறினர்.

ஜெய்ப்பூர் மண்டல ஆசிரமத்தில், நவம்பர் 24-26 தேதிகளில் ஹிந்தியில் நிகழ்ச்சிகள் நடைந்தேறின. இதில், ராஜஸ்தானிலிருந்து 70 அப்யாசிகளும் 6 ஒருங்கிணப்பாளர்களும் கலந்து கொண்டனர். ஒலி/ஒளி உள்ளிட்ட எல்லா நிகழ்ச்சிகளிலும் அனவரும் ஆழ்ந்திருந்தனர். தங்கள் மனம் நெகிழ்வதை கண்ணுற்றனர். அவர்கள், இந்நிகழ்ச்சி நடத்தப்பட்ட விதம் குறித்துப் பாராட்டு தெரிவித்தனர். இம்மண்டல ஆசிரமத்தில் அளிக்கப்பட்ட அடிப்படை வசதிகள், இதில் ஈடுபட்டிருந்த தன்னார்வத்தொண்டர்களின் அன்பாலும், கடின உழைப்பாலும் தரப்பட்டவையாகும்.

டிசம்பர் 16ம் தேதியன்று, உடுப்பி அருகேயுள்ள பெராம்பள்ளி ஆசிரமத்தில் 'நாட்குறிப்பு எழுதுதல்' என்பதைப் பற்றிய நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 2 ஒருங்கிணைப்பாளர்களும் 13, அப்யாசிகளும் கலந்து கொண்டனர். ஒருவரின் ஆன்மீக முன்னேற்றம் மற்றும் குண உருவாக்கம் ஆகியவைகளுக்கு ஒரு கருவியாக, நாட்குறிப்பு எழுதுவதைப் பற்றிய பல்வேறு அம்சங்கள்கலந்துரையாடப்பட்டன. ஒலி/ஒளிச் செய்திகள், மாஸ்டரின் இது பற்றிய மேற்கோள்கள் ஆகியவை காண்பிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சி கன்னடம் மற்றும் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டது. 'தியானம்' பற்றிய, வரப்போகும் அடுத்த நிகழ்ச்சியில், இன்னும் பல அப்யாசிகளை பங்கு பெற ஊக்குவிக்க உறுதி அளித்தனர். இந்நிகழ்ச்சி பற்றிய பின்கருத்து மிகவும் உற்சாகமூட்டுவதாய் இருந்தது.



## ஆசிரமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள்

ஞாயிறு அன்று முழு நாள் நிகழ்ச்சிகள், பழைய மற்றும் புதிய அப்யாசிகளை இணைக்கும் நோக்கில் நடைபெற்றன. குழு விவாதங்கள், மற்றும் வினா-விடை நிகழ்ச்சிகள், சாதனா சம்பந்தமான ஆர்வலர்களின் சந்தேகங்களை தெளிவாக்கின. இந்த நிகழ்ச்சிகள், அப்யாசிகள் பயிற்சியை சரிவர செய்வதற்கும், மற்றும் லட்சியத்தை நோக்கி பயணிப்பதற்கும் ஊக்கத்தை அளித்தன. பின்வருவன, பல்வேறு மையங்களில் நடைபெற்ற முழு நாள் மற்றும் அரை நாள் நிகழ்ச்சிகளின் அறிக்கை ஆகும்.

அக்டோபர் 2 ஆம் தேதி அன்று தமிழ் நாட்டிலுள்ள அவினாசி மையம் ஒரு அரை நாள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. அதில் 55 அப்யாசிகள் கலந்து கொண்டனர். ஆன்மீகத்தைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவது சம்பந்தமான உரைகள் மற்றும் புது ஆர்வலர்களுக்கு சகஜ மார்க்கத்தை விரிவாக எடுத்துரைப்பது ஆகியவைகளை இந்நிகழ்ச்சி உள்ளடக்கியிருந்தது. தலைப்புகள், சகஜ மார்க்க அடிப்படை சாதனாவை பற்றியதாக அமைந்தது. பங்கேற்பாளர்கள் முடிந்தளவு அமைதி காக்கும்படியும் இதயத்தின் குரலுக்கு செவிசாய்க்கும்படியும் அறிவுறுத்தப்பட்டனர்.

அக்டோபர் 23 ஆம் தேதி அன்று கேரளாவிலுள்ள பையனூரில், பங்கேற்பாளர்கள் ஒலி உலகத்திலிருந்து மென்குரல்கள் என்னும் புத்தகத்திலிருந்து மேற்கோள்களை வழங்கினர். மொத்தமாக 200 பங்கேற்பாளர்கள் வடக்கு மலபார் துணைமண்டலத்திலிருக்கும் ஏழு மையங்களிலிருந்து பங்கு பெற்றனர்.

நவம்பர் 4 ஆம் தேதி அன்று ராஜஸ்தானிலுள்ள பில்வாரா மையத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஒரு முழு நாள் நிகழ்ச்சியை நடத்தினர். நிகழ்ச்சியின் மையக்கருத்து, 'குரு' என்பதாகும். அதில் அனுபவ பகிர்வு நிகழ்வுகளும் ஒரு நாடகமும் இடம் பெற்றன. மேன்மைக்குரிய மாஸ்டரின் DVD தொகுப்பான 'Sahaj Marg Towards Infinity' காண்பிக்கப்பட்டது. இளைஞர் குழுவின் முயற்சிகளை பங்கேற்பாளர்கள் பாராட்டினர்.

நவம்பர் 18 ஆம் தேதி அன்று கேரளாவைச் சேர்ந்த ஆல்வா மையத்தில் நடைபெற்ற முழு நாள் நிகழ்ச்சியில் 200 அப்யாசிகள் பங்கு பெற்றனர். சத்சங்கத்தை தவிர மாஸ்டர் உரையின் வீடியோ பகுதிகள், கலந்துரையாடல் நிகழ்ச்சி, பாடுதல் மற்றும் கவிதை ஒப்புவித்தல் ஆகியன அந்த நாளின் முக்கிய நிகழ்வுகளாகும். தெய்வீகத்தன்மை மற்றும் இரவு 9 மணி உலகளாவிய பிரார்த்தனை தலைப்புகளில் தெளிவு ஏற்படும் விதமாக உரைகள் அமைந்திருந்தன.

டிசம்பர் 2 ஆம் தேதி அன்று ஆந்திர பிரதேசத்திலுள்ள திருப்பதி மையத்தில் நடைபெற்ற வித்தியாசமான முழு நாள் நிகழ்ச்சியில் சுமார் 130 பேர் பங்கேற்றனர். அப்யாசிகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வினாக்களின் தொகுப்பிலிருந்து வினாக்களுக்கு தம் இயல்பின்படி விடைகளைத் தேர்வு செய்து அதற்கான மதிப்பெண்களைக் கொண்டு தன்னைத் தானே சுய மதிப்பீடு செய்து கொண்டனர். அதில் சகஜ மார்க்கம், அப்யாசிகள் மற்றவர்களிடம் நடந்து கொள்ளும் விதம், தன்னார்வத் தொண்டு மற்றும் ஆசிரமம் குறித்து கேள்விகள் இருந்தன. இந்த செயல்பாடு, பங்கேற்பாளர்கள் தங்களின் மனப்பான்மையை புரிந்து கொள்ளவும், தம்மை மேன்படுத்தும் வழிகளைக் கண்டறியவும் உதவியது.

## தென்தமிழ் நாட்டின் ஆசிரியர்களுக்கு சகஜ மார்க்கத்தை அறிமுகப்படுத்தல்(2012)

நவம்பர் 23 ஆம் தேதி முதல் டிசம்பர் 1 ஆம் தேதி வரை தென்தமிழ்நாட்டில் இணைச் செயலாளர், சகோ. A.P. துரை, பல வரவேற்புக் கூட்ட நிகழ்ச்சிகளை நடத்தினார். இந்த நிகழ்ச்சி முதல் மூன்று நாட்கள் தஞ்சாவூர், அரியலூர், திருவாரூர், புதுக்கோட்டை அகிய இடங்களிலும், அடுத்த ஆறு நாட்கள் திருநெல்வேலி, கன்னியாகுமாரி மாவட்டங்களிலும் நடைபெற்றது.

இந்த வரவேற்புக் கூட்டங்கள் ஆசிரியர்களை மையமாக வைத்து நடத்தப்பட்டது. மொத்தமாக சுமார் 750 ஆசிரியர்கள் 17 பள்ளிகளிலிருந்து இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்றனர். இதில் ஏறத்தாழ 200 பேர் தியானத்தைத் தொடங்க தங்களது விருப்பத்தைத் தெரிவித்தனர். பயிற்சியை தொடங்குவதற்கு முன்பு தங்களைத் தயார் செய்து கொள்ள, அவர்களுக்கு அடிப்படை புத்தகங்கள் வழங்கப்பட்டன.

பள்ளியின் முதல்வர்களுக்கும்/தலைமை ஆசிரியர்களுக்கும் இந்நிகழ்ச்சி பற்றிய தகவல்களை முன்கூட்டியே சரிவர சொல்லாதது தெரிய வந்த காரணத்தால், அவர்களிடம் வரவேற்புக் கூட்டம் நடத்த அனுமதி கேட்கும் போது ஒரு கடிதத்துடன், படிக்க சில புத்தகங்களையும் கொடுக்க முடிவு செய்யப்பட்டது.

சகோதரர் துரை மாஸ்டரிடம், சில ஆண்டுகளுக்கு முந்தைய சூழலை ஒப்பிடுகையில் தற்போது மக்கள் சகஜ மார்க்க செய்திகளை ஏற்க தயாராக இருப்பதாக கூறியபோது, மாஸ்டர் "ஆதலால் தான் பாபூஜி மகராஜ் மக்களின் இதயங்கள் திறந்து கொண்டிருக்கிறன" என்று கூறியதாகவும் தெரிவித்தார்.

இந்த தொடர்ச்சியான வரவேற்புக் கூட்டங்கள், இவற்றை ஒருங்கிணைத்த பிரசெப்டர்கள், மற்றும் அப்யாசிகளுக்கு, ஒரு சிறந்த பயிற்சிக்களம் என்பதை நிரூபித்தன. பிரசெப்டர் சகோதரர்கள், நல்லாயிரம் (வள்ளியூர்), அன்பழகன் (திருநெல்வேலி), Dr. நாதன் (நாகர்கோயில்), கிருஷ்ணராஜன் (வடக்கன்குளம்) மற்றும் சகோதரி Dr. ராஜலட்சுமி (திருநெல்வேலி) போன்றவர்களுக்கு தன்னார்வத் தொண்டர்கள் மிக்க ஈடுபாட்டுடன் உதவினர். தஞ்சாவூர் மற்றும் அதனருகிலிருக்கும் மையங்களில், மண்டலப் பொறுப்பாளர், சகோதரர் B.S.முருகன் உள்ளூர் பிரசெப்டர்களான சகோதரர் சுப்ரமணியம், சகோதரர் பொய்யாமொழி மற்றும் சகோதரி காமாட்சி போனறவர்களின் உதவியுடன் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். மாஸ்டரின் பிரசன்னத்தை எல்லாச் செயல்பாடுகளிலும் உணர முடிந்ததுடன், அனைத்து இடங்களிலும் இந்த நிகழ்ச்சிகள் திறம்பட நடைபெற எல்லா வழிகளையும் அவர் திறந்து விடுவதையும் உணர முடிந்தது.



# ஆனந்த் ஆசிரமம், குஜராத்

# ஒளி மையம்

"எனவே, நாம் என்னவாக ஆகவேண்டும் என்பதற்கு ஒரு குறியீடாக, மாஸ்டரைப் பயன்படுத்த வேண்டும். சகஜ மார்க்கம் உங்களுக்காக என்ன செய்கிறது என்பதை நீங்கள் உங்களுக்குள் நோக்க வேண்டும். பின்பு, பாதையில் நாம் தொடர்வோம். பிற அனைத்தையும் புறக்கணித்து விட்டு அமைதியாகச் செல்வோம். நான் இலக்கை அடையவேண்டும்; இலக்கு என் முன்னே இருக்கிறது. நான் என்னவாக ஆக வேண்டும் என்பதை அது எனக்குக் காட்டுகிறது. என்னையே நான் பார்த்துக் கொண்டு, இன்னும் என்னிலிருந்து நான், எதைச் செதுக்கித்தள்ள வேண்டும் அல்லது, எதைக்கூட்டவோ அல்லது குறைக்கவோ வேண்டும் என்பதைக் காண்கிறேன். இலக்கை விரைவில் அடைய முடிகின்ற ஒரு எளிய, சீரான, வசதியான பயணமாக அது அமைகிறது."

ஆனந்த், குஜராத்தில் மாஸ்டரின் உரை - 29 ஜனவரி, 2004







'ஆனந்த் ஆஷ்ரம்' என்பது குஜராத், ஆனந்தில், அமைந்துள்ள ஆசிரமத்திற்கு மாஸ்டர் அளித்த பெயராகும். ஏனெனில், அங்கு அனைவருக்கும் மிகுந்த ஆனந்தம் கிடைக்கிறது. ஆனந்த், அகமதாபாத் மற்றும் வதோதராவிற்கு இடையே அமைந்துள்ள, மாவட்டத் தலைமையகம் ஆகும்.இந்தியாவில் 'வெண்மைப் புரட்சி'க்கு முன்னோடிகளான, அமுல் பால் பண்ணை, IRMA, NDDB இவைகளால் புகழ் பெற்றது.

'80 களிலும், 90 களின் தொடக்கத்திலும், 1992-93ல் மாஸ்டரின் மனைவியார் சுலோசனாமாமி, ஆனந்தில் சிலமாதங்கள் சிகிச்சை பெற்றபோதும், பலமுறை மாஸ்டர் ஆனந்த் மையத்திற்கு விஜயம் செய்ததினால், அது தழைத்தோங்கியது. மாஸ்டர், IRMA, NDDB மற்றும் விலங்கியல் கல்லூரி ஆகிய இடங்களில், உரைகளும் நிகழ்த்தியிருக்கிறார்.

1995ல், சகோ. P.S. பார்கவா, தம் வீட்டு மனையின் ஒரு பகுதியை, SRCM தியானமண்டபமாகப் பயன்படுத்த, ஒரு கொட்டகை கட்ட மாஸ்டர் அனுமதித்தார். அதற்கு 'மண்டபம்' என்று மாஸ்டர் பெயர் சூட்டினார். 1996ல், சகோதரி அஞ்சனா நாகர், ஆனந்திலிருந்து 5 கி. மீ. தொலைவில் உள்ள ஹட்குட் என்ற கிராமத்தில், ஆசிரமம் கட்டுவதற்காக, ஒரு சிறு துண்டு நிலத்தைத் தன் தாழ்மையான காணிக்கையாக அளித்தார். மாஸ்டர் 1997 ஜனவரியில், ஆசிரம இடத்திற்கு வருகை தந்து, அது அமைந்துள்ள குடியிருப்புப் பகுதிக்கு 'ஸ்ரீராம் சந்திரபுரம்' என்று பெயரிட்டார். 2000ம் ஆண்டு, செப்டம்பர் 5ம் தேதியன்று, 150 அப்யாசிகள் அமரக்கூடிய ஒரு புதுக்கட்டிடம், அன்றைய மண்டலப் பொறுப்பாளராக இருந்த சகோ. மதுகர் கோச்சர் அவர்களால், மாஸ்டரின் அனுமதியுடன் திறந்து வைக்கப்பட்டது. ஆனந்த், வதோதரா, வனக்போரி, மற்றும் நாடியாட் மையங்களிலிருந்து சுமார் 165 அப்யாசிகள் அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

2004, ஜனவரி 30 அன்று, மாஸ்டர் ஆனந்திற்கு வருகை தந்தார். அச்சமயத்திற்குள்ளாக, ஒரு வெளிப்புறத் தாழ்வாரமும் அமைக்கப்பட்டு இருந்தது. நீர் ஆதாரம் ஒன்றும் மனைக்குள் கிடைத்திருந்ததால், காலி இடத்தில் ஒரு தோட்டமும் உருவாக்கப்பட்டிருந்தது. சத்சங்கத்திற்குப் பின், ஆசிரமத்தின் முன்புறத்தில், கடம்ப மரக்கன்று ஒன்றை மாஸ்டர் நட்டார். இன்று அது, சுமார் 40 அடி உயரமுள்ள மரமாக வளர்ந்துள்ளது. அது, மற்ற மரங்கள், புதர்களுடன் சேர்ந்து, ஆசிரமத்திற்கு ஒரு தனிப்பட்ட அழகைக் கொடுக்கிறது.





To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2013 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.